# தரம் 06 மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்

**அஸீஸ் பாத்திமா ஹாழிறா, ராஜேந்திரன் தக்ஷாயினி**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
halira19961116@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

"தரம் 6 மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்" என்ற தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது எழுத்துத்திறன் விருத்தி பின்னடைவாக உள்ள போது அது கற்றலில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் கண்டறிவதனை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் ஏறாவூர்க் கல்விக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை மையப்படுத்திய ஓர் அளவை நிலை ஆய்வாகும். ஏறாவூர் கல்விக் கோட்டமானது 1 AB பாடசாலைகள் நான்கையும் 1C பாடசாலை ஒன்றையும் வகை II பாடசாலைகள் ஐந்தையும் வகை III பாடசாலைகள் எட்டினையும் (18 பாடசாலைகள்) கொண்டு காணப்படுகின்றது. இப்பாடசாலைகளில் இருந்து தரம் 6 வகுப்பினைக் கொண்ட 10 பாடசாலைகளும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன. 10 பாடசாலைகளில் இருந்தும் 12 அதிபர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் தரம் 6 இற்குக் கற்பிக்கும் 82 ஆசிரியர்கள் ஆண், பெண் என்றரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 41 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், தரம் 6 வகுப்பினைச் சேர்ந்த 648 மாணவர்கள் ஆண், பெண் என்றரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 5:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 125 மாணவர்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 5:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 25 பேர் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்களிடமிருந்து வினாக்கொத்து மூலமாகவும் அதிபர்கள், பெற்றோர்களிடமிருந்து நேர்காணல் மூலமாகவும் அளவு மற்றும் பண்பு ரீதியாகத் தரவுகள் பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் Excel மென்பொருளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபுகள் மூலம் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. அதிலிருந்து பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன. எழுத்துத்திறன் பின்னடைந்த மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பின்தங்கிய நிலையில் காணப்படுவதுடன் இந்நிலைமையானது ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடுகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அந்தவகையில், மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தியினை மேம்படுத்துவதற்கான பொருத்தமான விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *மாணவர்கள், எழுத்துத்திறன் விருத்தி, கற்றல், தாக்கம்*

## ஆய்வு அறிமுகம்

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் பல்வேறு விதமான செயற்பாடுகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடே பிரதான வகிபங்கை வகிக்கின்றது. இந்த வகையில் வரையறுக்கப்பட்ட இலக்குகளையும், நோக்கங்களையும் கலைத்திட்ட அமுலாக்ககத்தினூடாக மாணவர்களிடத்தில் உருவாக்கும் வகையில் பாடசாலைச் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இவற்றைத் திருப்தியாக முன்னெடுப்பதற்கு மாணவர்களின் கற்றல் செயற்பாடு உயர்வானதாக இருக்க வேண்டும். ஆனால் எமது சமூகத்திலுள்ள பாடசாலை மாணவர்களிடையே எழுத்துத்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்கள் பலர் காணப்படுவதோடு, கற்றல் செயற்பாடுகளும் மிகவும் மந்தமாகவும், பின்னடைந்த நிலையிலும் காணப்படுகின்றது.

மேலும் எழுத்துத்திறன் ஒவ்வொருவரிடமும் உயர்வான நிலையில் காணப்படும்போது கற்றல் சிறப்பாக அமையும். அதாவது கற்றல் கற்பித்தல் செயற்பாடு சிறப்பானதாக அமைவதற்கு எழுத்துத்திறன் விருத்தி அவசியமாகின்றது. ஆனால் ஒருசில மாணவர்கள் இவ்வெழுத்துத்திறன் குறைபாடு காரணமாக கற்றலில் பின்தங்குவதோடு சுய எழுத்தாற்றல், புதியவிடயங்களை உள்வாங்கிக்கொள்ள முடியாதவர்களாகவும் புதிய விடயங்களை அறியும் ஆர்வம் அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு எழுத்துத் திறனில் பின்னடைந்த மாணவர்களின் ஈடுபாடற்ற கற்றல் முயற்சிகளினால் வகுப்பாசிரியர்கள், பாட ஆசிரியர்கள் சிரமப்படுவதுடன் அலகு முன்னேற்றம், முறையான கலைத்திட்ட அமுலாக்கம், வினைத்திறனான வகுப்பறைச் செயற்பாடுகளை திருப்திகரமாக மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

கல்வி மற்றும் தொழில்முறை சமூகங்களில் எழுதும் திறன் மிகவும் அவசியமானது. இது ஒரு முக்கியமான தகவல்தொடர்பு வழிமுறையாகும், இதன் மூலம் எழுத்தாளர் உணர்வுகள், யோசனைகள் மற்றும் வாதங்களை வெளிப்படுத்துகிறார். மொழியைக் கற்கும் விடயத்தில், ஒருவருக்குத் தெரியாத ஒரு மொழியில் எழுதுவது கடினமான பணியாகும். உண்மையில், எழுத்து எந்த மொழியையும் கற்றுக்கொள்வதற்கான ஒரு முக்கியமான திறனைக் குறிக்கிறது.

அந்த வகையில் கனிஸ்ட இடைநிலைப் பிரிவிலுள்ள தரம் 6 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தி கற்றலில் எவ்வாறான சவால்களை ஏற்படுத்துகின்றது, இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு எவ்வாறான விடயங்கள் காரணிகளாக அமைகின்றன, இதனை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் போன்றவற்றை ஆராய்ந்து இம்மாணவர்கள் எதிர்நோக்கும் எழுத்துத் திறன் தொடர்பான சவால்களினை நிவர்த்தி செய்வதற்கான விதப்புரைகளை ஆய்வு நோக்கில் தெளிவுபடுத்துவதுடன், இம்மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபட உதவும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

கல்வி தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் மாணவர்களுக்கு மட்டுமல்லாது மாணவர்களைச் சார்ந்து நிற்கும் சமுதாயத்தையும் பாதிக்கின்றது. இவ்வாறன பிரச்சினையே ஆய்வுக்குரிய பொருளாகின்றது. இவ்வகையில் கல்வியை பிரதானமாக வழங்கக் கூடிய பாடசாலைகளில் பல்வேறு பிரிவுகள் சார்ந்தும் பிரச்சினைகள் காணப்படுகின்ற போதிலும் குறிப்பாக கனிஸ்ட இடைநிலை வகுப்பினைச் சேர்ந்த தரம் 06 மாணவர்கள் எழுத்துத் திறன் குறைபாடு உடையவர்களாகக் காணப்படுவது முக்கியமான ஆய்வுப் பிரச்சினைகளில் ஒன்றாகும்.

அதனடிப்படையில் தரம் 06 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தி கற்றலில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்ற பிரச்சினையை மையமாகக் கொண்டதாக இவ்வாய்வு அமைகின்றது. அந்த வகையில் தமிழ் மொழியானது தாய் மொழியாகவும் ஏனைய பாடங்களைக் கற்பதற்கான ஊடகமாகவும் காணப்படுகின்றது. இதில் மாணவர்களின் எழுத்துத்திறன் பாதிப்படையுமானால் அது அவர்களின் கற்றலில் பல்வேறு சவால்களை ஏற்படுத்தும்.

முன்பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம் வரையிலான கற்றல் செயற்பாடுகள் தாய் மொழியில் அமைவதால் தாய் மொழியில் எழுத்து தேர்ச்சி முக்கியத்துவம் பெறுகின்றது. எழுத்தில் மாணவர்கள் தவறு விடும் பொழுது அது அவர்களது பரீட்சைப் பின்னடைவுகளுக்குக் காரணமாகி விடுகின்றது (Rosariyo,2019). இதனால் மாணவர்கள் எழுத்துத் துறையில் சிறப்பான முறையில் தங்களது தூண்டலை வெளிப்படுத்தல் அவசியமாகும்.

அதே போல தரம் 6 வகுப்புக்களில் மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி குறைவதனால் அவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகளின் முன்னேற்றத்திற்கு அது பெரும் தடையாகக் காணப்படுவதுடன் பாரிய பிரச்சினையாகவும் உருவெடுத்துள்ளது. அவ்வகையில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனும் இந்த நான்கு அடிப்படைத் திறன்களும் மாணவரிடம் குறைவடையும் போது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றது. இதனால் இடைவிலகல் அதிகரித்தல், மெல்லக்கற்போர் தொகை அதிகரித்தல், கற்றலில் ஆர்வமின்மை மற்றும் கற்றல் செயற்பாடுகளில் பின்தங்குகின்ற நிலையும் ஏற்படுகின்றது. அந்த வகையில் 6ஆம் வகுப்பு மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தியில் பல காரணிகள் தாக்கம் செலுத்துவதனால் மாணவர்கள் உளரீதியாகவும் சோர்வுற்று சுயமாகக் கற்பதில் நாட்டம் குறைந்து செல்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அத்துடன் மாணவர்கள் கற்றுக்கொண்ட விடயங்களை பூரணமாக விளங்கி இருந்தும் அவற்றை வெளிப்படுத்தும் பொழுது எழுத்துத் திறன் விருத்திக் குறைபாடு காரணமாக தெளிவற்ற நிலையிலும் விளங்காத வகையிலும் எழுத்துக்கள் அமைவதனால் பரீட்சைகளில் சித்தியடையத் தவறவிடுகின்றனர். அல்லது குறைவான புள்ளிகளைப் பெறுகின்றனர். இது மாணவர்களின் மொழிப்பாடத்திற்கும் ஏனைய பாடங்களுக்கும் பொதுவானதாகவே காணப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆய்வுக்குரிய பிரதேசத்தில் ஆய்வாளனால் இனங்காணப்பட்ட முக்கிய ஆய்வுப் பிரச்சினையாக இது காணப்பட்டது. இதன் பின்னணியிலேயேதான் மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி தொடர்பாக கற்றலில் எதிர்நோக்கும் சவால்களை இனங்கான வேண்டிய முக்கிய தேவை ஏற்படுகின்றது. அதனடிப்படையில் தரம் 6 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தி கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் என்பது முழுமையான கற்றல் பிரச்சினையாகும்.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று.**

ஏறாவூர் கோட்ட 1 AB, 1 C, வகை II பாடசாலைகளிலுள்ள தரம் 6 மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி கற்றல் செயற்பாட்டின் போது பல தாக்கங்களை ஏற்படுத்துவதால் கற்றலில் சிறந்த நிலையினைப் பெறுவதில் அது பல சவால்களை ஏற்படுத்துகின்றது.

**ஆய்வின் நோக்கம் - பொது நோக்கம்**

எழுத்துத்திறன் விருத்தி குறைவடையும் பொழுது கற்றல் செயன் முறையில் எவ்வாறான தாக்கங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதைக் கண்டறிந்து அவைகளுக்கான சிபார்சுகளை முன்வைத்தல்.

**சிறப்பு நோக்கங்கள்**

1. தரம் 6 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தியின் தற்போதைய நிலையினை இனங்காணுதல்.
2. தரம் 6 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தியின் முக்கியத்துவத்தைக் கண்டறிதல்.
3. தரம் 6 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தி பின்னடைவால் கற்றலில் எதிர் கொள்ளும் சவால்களை ஆய்வு செய்தல்.
4. தரம் 6 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்திக்கான பரிகாரச் செயற்பாடுகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

Westwood என்பவர் (2004) இல் What teachers need to know about Reading and writing Difficulties எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் எழுதுவது பேசுவது போல் எளிதானது அல்ல. விபரங்கள் தவறாக இருந்தால் அதனைப் பெறுபவர் தவறாகப் புரிந்துகொண்டு தவறாக நடந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும் எனக் குறிப்பிடுகின்றார்.

Richchart (2008) என்பவர் மொழிக் கற்பித்தல் முறைகள் எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் ஒரு வகுப்பறையில் எழுதுதல் செயற்பாடு முக்கியமான நான்கு படிகளைக் கொண்டுள்ளது. திட்டமிடல், எழுதுதல், மதிப்பீடு, மீள எழுதுதல் என்பவைகளே அவையாகும். இவை ஒரு ஆசிரியரால் சிறப்பாக நடாத்தப்படுகின்ற போது மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தியடையக் கூடிய நிலை ஏற்படும் எனக் குறிப்பிட்டார்.

Fitri என்பவர் (2013) இல் மாணவர்களின் எழுத்துத் திறன் பகுப்பாய்வு எனும் தலைப்பின் கீழ் மேற்கொண்ட ஆய்வில் எழுத்துத் திறனானது தகவல் தொடர்புகளில் முக்கிய பங்கு வகிக்கிறது, எழுத்தின் மூலம் எல்லோராலும் உணர்வு மற்றும் யோசனைகளை வெளிப்படுத்தவும், மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவும் முடியும் என்றார்.

இஸ்மாயில் (2014) என்பவர் தனது ஆய்வின் படி எழுத்து எப்போதும் ஒரு முக்கியமான திறமையாகக் காணப்படுகின்றது. இது இலக்கணக் கட்டமைப்பு, சொற்களஞ்சியத்தை வலுப்படுத்துவதால் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதனால் ஆசிரியர்கள் மூலம் எழுத்துத் திறன் போதுமானளவு மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு கற்பிக்கும் மாணர்களின் திறன்கள விருத்தியடையக் கூடிய நிலை ஏற்படும். இதனால் மாணவர்கள் சிறந்து விளங்குவார்கள் எனக் குறிப்பிட்டார்.

Shiham fowzer (2021) என்பவர் மொழிக் கற்றலுக்கு அனைத்துத் திறன்களும் முக்கியமானவை என்றாலும், கல்வி மற்றும் தொழில்முறை சமூகங்களில் எழுதும் திறன் மிகவும் அவசியமானது. இது ஒரு முக்கியமான தகவல்தொடர்பு வழிமுறையாகும், இதன் மூலம் எழுத்தாளர் உணர்வுகள், யோசனைகள் மற்றும் வாதங்களை வெளிப்படுத்துகிறார். மொழியைக் கற்கும் விடயத்தில், ஒருவருக்குத் தெரியாத ஒரு மொழியில் எழுதுவது கடினமான பணியாகும். உண்மையில், எழுத்து எந்த மொழியையும் கற்றுக்கொள்வதற்கான ஒரு முக்கியமான திறனைக் குறிக்கிறது என தனது ஆய்வில் குறிப்பிடுகின்றார்.

Mohd sharif என்பவரும் ஏனையோரும் (2021) ஆம் ஆண்டில் தொழில் முறை அடையாளத்தின் கருத்துக்கள் எனும் தலைப்பில் தாம் மேற்கொண்ட ஆய்வில் குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகளுக்கு அதிகம் மனமகிழ்வு ஏற்படுத்தக் கூடிய விடயங்களை ஏற்படுத்தும் போது அது அவர்களின் எழுத்துத் திறன் விருத்தி அடைவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும் எனக் குறிப்பிடுகின்றனர்.

**ஆய்வு முறையியல்.**

ஆய்வு முறையியல் சிறப்பானதாகக் காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத் தன்மையாக அமையும். அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு என்ற மூன்று மாவட்டங்கள் அமையப் பெற்றுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களவர் எனப் பல சமூகம் வாழ்கின்றனர்.

14 பிரதேச செயலகப் பிரிவுகளை கொண்ட இம்மட்டக்களப்பு பிரதேசத்தில் 348 கிராம சேவகர் பிரிவுகளும் அடங்கப் பெற்றுள்ளது. அதிகளவு தமிழ் மக்களை கொண்ட இம்மாவட்டம் பட்டிருப்பு கல்வி வலயம், மட்டக்களப்பு கல்வி வலயம், மட்டக்களப்பு மத்தி வலயம், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம், கல்குடா கல்வி வலயம் ஆகிய ஐந்து கல்வி வலயங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திற்கும் கோட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இவ்வாய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஏறாவூர் கல்விக் கோட்டமாகும்.

இவ்வாய்வில் எண், அளவு ரீதியான முறையியல்களும், பண்பு ரீதியான முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண் ரீதியான முறையியலினுள் எண்கள், அட்டவணைகள், வரைபடங்கள், மாணவர் தொகை, விகிதாசாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆய்வு தொடர்பான கோட்பாடு ரீதியான உறுதிப்படுத்தலுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையியல் காணப்படுகின்றது. இங்கு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்களிடத்தில் வினாக்கொத்து மூலமாகவும், அதிபர்கள், மாணவர்களின் பெற்றோர்களிடத்தில் நேர்காணல் மூலமாகவும் தரவுகள் பெறப்பட்டது.

இதன்படி அளவு ரீதியான, பண்பு ரீதியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைவதால் இவ்வாய்வில் கலப்பு ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்து அதன் மூலம் முடிவுகளைக் கண்டறிவதாக இவ்வாய்வானது அமைவதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக அமைந்துள்ளது.

***மாதிரித் தெரிவு***

ஆய்வாளனினால் பாடசாலைகளையும் பாடசாலை மனித வளங்களையும் அடிப்படையாகக்கொண்டு மாதிரித்தெரிவு இடம்பெற்றுள்ளது. அவ்வகையில் மாதிரித் தெரிவானது ஆய்விற்காக தரவுகளைத் திரட்டும்போது முழுத்தொகையினையும் ஆய்வுக்குட்படுத்த முடியாமையின் காரணமாக இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு படையாக்கப்பட்ட மாதிரியும் இலகு எழுமாற்று மாதிரியும், நோக்க மாதிரியும் தரவு சேகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாய்விற்காக தரவுகளை திரட்டும் வகையில் பாடசாலைகளும், அதிபர்கள் ஆசிரியர்கள். மாணவர்கள் மற்றும் பெற்றோர் போன்றோரும் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தரம் 6 மாணவர்கள் இதனுள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

ஏறாவூர் கல்விக் கோட்டத்தில் 18 பாடசாலைகள் காணப்படுகின்றன. அதாவது 1AB பாடசாலைகள் 4 உம் 1C பாடசாலை 1 உம் வகை II பாடசாலைகள் 5 உம் வகை III பாடசாலைகள் 8 உம் என மொத்தமாக 18 பாடசாலைகளைக் கொண்டு காணப்படுகின்றன. இவற்றில் இவ் ஆய்வுக்குரிய மாதிரிப் பாடசாலைகளாக 1AB பாடசாலைகள் 4 உம் 1C பாடசாலை ஒன்றும் வகை II பாடசாலைகள் 5 உம் என மொத்தமாக 10 பாடசாலைகள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளின் 12 அதிபர்களில் இருந்து 12 அதிபர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 10 பாடசாலைகளில் இருந்தும் தரம் 6 வகுப்புக்குக் கற்பிக்கும் 82 ஆசிரியர்களில் இருந்து 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 41 ஆசிரியர்களும் ஆண், பெண் என படையாக்கப்பட்டதன் பின்னர் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பெற்றோர்களின் மாதிரித் தெரிவானது ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 125 மாணவர்களின் பெற்றோர்களில் இருந்து 5:1 எனும் விகிதத்தில் 25 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறாக இவ்வாய்வுக்காக ஆய்வாளனால் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உள்ளனர்.

இவ்வாய்வில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல் என்பன அமையப்பெற்றன. இவ்வினாக்கொத்தானது மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட


ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோருக்கு வழங்கப்பட்டது. இவ்வினாக்கொத்தில் மூடிய மற்றும் திறந்த வினாக்கள் இடம்பெற்றுள்ளது. வினாக்கள் முறையான தொடர் ஒழுங்கில் காணப்பட்டதுடன் ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோரால் இலகுவில் வாசித்து விளங்கக் கூடியதாக அமைக்கப்பட்டது.

அந்தவகையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், மற்றும் மாணவர்களின் பெற்றோர்களிடமும் ஆய்வாளனால் நேர்காணலானது இடம்பெற்றது. அதனடிப்படையில் இந்நேர்காணலானது நேருக்கு நேரான கலந்துரையாடல் மூலம் ஆய்வுக்குத் தேவையான பொருத்தமான ஆய்வுடன் தொடர்புடைய தகவல்களை பெற்றுக் கொள்ளும் ஒரு வழியாகவே பயன்படுத்தப்பட்டது.

**தரவுப் பகுப்பாய்வுகள்**

***தரம் 6 மாணவர்களின் எழுத்துத்திறனின் தற்போதய நிலை.***

தரம் 6 மாணவர்கள் எழுத்துத்திறன் செயற்பாட்டில் எவ்வாறான நிலைகளில் உள்ளனர்? எனும் வினாவினை ஆசிரியர்களிடம் வினவியபோது 42% ஆன ஆசிரியர்கள் குறைவு என விடையளித்தனர்.





உரு 4.1 எழுத்துத் திறனில் மாணவர்கள் குறைவாக இருப்பதற்கான காரணங்களாக ஆசிரியர்கள் குறிப்பிட்டவை.

உரு 4.1 இன்படி அதற்கான காரணத்தை வினவியபோது கிடைக்கப்பெற்ற பதில்களுக்கிணங்க மாணவர்கள் வீட்டில் எழுத்துப் பயிற்சியில் ஈடுபடாமை எனும் காரணியே அதிகமாக (61%) கிடைக்கப்பெற்றுள்ளது. அதே போல பெற்றோர் எழுதுவதற்கு ஊக்கம் அளிக்காமை, மாணவர்களிடம் எழுவதற்கான ஆர்வம் குறைவாக உள்ளமை போன்ற காரணிகளால் எழுத்துத் திறன் விருத்தியில் பின்னடைவான நிலையில் காணப்படுகின்றனர் என்பதையும் அறியலாம். அந்த வகையில் மாணவர்கள் வீட்டில் எழுத்துப் பயிற்சியில் ஈடுபடாமை எனும் காரணியே அதிகமான எழுத்துத்திறன் பின்னடைவுக்குக் காரணமாகியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

***எழுத்துத்திறன் விருத்தியின் முக்கியத்துவம்***

தரம் 6 மாணவர்களின் கற்றலுக்கு எழுத்துத்திறன் விருத்தி முக்கியமானதா? என்பதனை அறிவதற்கான வினாவானது ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இது தொடர்பாக 125 மாணவர்களிடம் கேட்டறிந்த போது இதற்கு 125 மாணவர்களும் ஆம் என விடையளித்தனர். இது 100% ஆக அமைகிறது. இவ்வினாவானது தரம் 6 வகுப்பு கற்பிக்கின்ற ஆசிரியரிடம் வினவப்பட்ட போது 41 ஆசிரியர்களும் இதற்கு ஆம் என விடையளித்தனர். இது 100% ஆகும்.




உரு 4.2 கற்றலுக்கு எழுத்துத்திறன் விருத்தியின் முக்கியத்துவம்.


அதே போன்று இவ்வினாவினை 12 அதிபர்களிடமும் 25 பெற்றோர்களிடமும் நேர்காணலின் மூலம் கேட்டறிந்த போது அவர்கள் அனைவரும் கற்றலுக்கு எழுத்துத்திறன் விருத்தி முக்கியத்துவம் வாய்ந்நததாகும் என்ற கருத்தினைத் தெரிவித்தனர். அதனடிப்படையில் நோக்கும் போது கற்றலின் பிரதான அச்சாணியாக விளங்குவது எழுத்துத்திறன் ஆகும் என்பது புலப்படுகின்றது.

இதனையே Shiham fowzer (2021) என்பவர் இலக்கியத்தின் ஊடான எழுத்துத்திறன் விருத்தி எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வின் முடிவின் படி மொழிக் கற்றலுக்கு அனைத்துத் திறன்களும் முக்கியமானவை என்றாலும், கல்வி மற்றும் தொழில்முறை சமூகங்களில் எழுதும் திறன் மிகவும் அவசியமானது. இது ஒரு முக்கியமான தகவல்தொடர்பு வழிமுறையாகும், இதன் மூலம் எழுத்தாளர் உணர்வுகள், யோசனைகள் மற்றும் வாதங்களை வெளிப்படுத்துகிறார். மொழியைக் கற்கும் விடயத்தில், ஒருவருக்குத் தெரியாத ஒரு மொழியில் எழுதுவது கடினமான பணியாகும். உண்மையில், எழுத்து எந்த மொழியையும் கற்றுக்கொள்வதற்கான ஒரு முக்கியமான திறனைக் குறிக்கிறது எனக் குறிப்பிடுகின்றார். இது ஒருவரவின் கற்றலுக்கு எழுத்துத்திறன் விருத்தி முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்னும் ஆய்வாளனின் முடிவுக்கு சான்றாக அமைகின்றது.

***எழுத்துத் திறன் பின்னடைவினால் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்கள்***

மாணவர்களின் ஆளுமைத் திறனில் எழுத்துத்திறன் விருத்தியானது சவாலினை ஏற்படுத்துகின்றதா என்ற வினாவினை 41 ஆசிரியர்களிடமும் கேட்டறிந்த போது அவர்கள்

அனைவரும் ஆம் என பதிலளித்திருந்தனர். இது 100% ஆகக் காணப்படுகின்றது. இவ்வாறு எழுத்துத்திறன் விருத்தி குறைந்த மாணவர்கள் எவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர் எனக் கேட்டறிந்த போது அதற்கு ஆசிரியரின் விடைகள் பின்வருமாறு காணப்பட்டது.





உரு 4.3 மாணவர்களின் ஆளுமைத் திறனில் எழுத்துத்திறன் பின்னடைவு ஏற்படுத்தும் சவால்கள்

Ungan (2007) என்பவர் எழுத்துத் திறனின் முக்கியத்துவமும் அபிவிருத்தியும் எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வு முடிவின்படி எழுதும் திறனை மேம்படுத்துவதால், மாணவர்களின் அறிவைப் பரப்ப முடியும். இதன் மூலம் சிறந்த முறையில் அவர்களின் எண்ணங்களை மிகவும் திறமையாக மறுபரிசீலனை செய்யவும், அவர்களின் திறனை வளர்க்கவும் இது வாய்ப்பாக அமைகின்றது எனக் குறிப்பிட்டார். இக்கருத்தின் அடிப்படையில் நோக்கும் போது ஆய்வாளனின் கருத்தானது மாணவர்களின் ஆளுமைத் திறனில் எழுத்துத்திறன் விருத்தி நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றது என்னும் முடிவோடு இணைந்து செல்வதாய் உள்ளது.

### *எழுத்துத்திறன் விருத்திக்கான பரிகாரச் செயற்பாடுகளும் வழிமுறைகளும்*

உங்களது எழுத்துத்திறன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதேனும் பரிகாரச் செயற்பாடுகள் பாடசாலையில் மேற்கொள்கின்றார்களா? எனும் வினாவை மாணவர்களிடம் வினவிய போது 68% ஆன மாணவர்கள் ஆம் என பதிலளித்திருந்தனர். இது தொடர்பாக 32% ஆன மாணவர்கள் இல்லை என பதிலளித்திருந்தனர். மேலும் ஆசிரியர்களிடம் புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்திக் கற்பிக்காமைக்கான காரணங்கள் பற்றி வினவிய போது அதற்கு பின்வருமாறு பதிலளித்திருந்தனர். இதனை உரு 4.4 காட்டுகின்றது.




உரு 4.4 புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்திக் கற்பிக்காமைக்கான காரணங்கள் தொடர்பாக ஆசிரியர்கள் குறிப்பிட்டவை.

மேற்காட்டப்பட்ட உரு 4.4 இன்படி புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்திக் கற்பிக்காமைக்கான காரணங்களில் நவீன துணைச்சாதனங்களின் பற்றாக்குறையே அதிகம் எனத் தெரிவித்தனர். இக்காரணியில் பாடசாலையில் போதிய கணினிகள் காணப்படாமை, கணினி தொடர்பான வாண்மைத்துவப் பயிற்சிகளை பாடசாலை வழங்காமை, 40 நிமிடத்தில் கணினியைப் பயன்படுத்தி கற்பிப்பதில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டுக்கள் போன்றன இக்காரணியில் செல்வாக்குச் செலுத்துவதாகக் குறிப்பிட்டனர்.

**முடிவுகளும் விதப்புரைகளும்**

***தரம் 6 மாணவர்களின் எழுத்துத்திறனின் தற்போதய நிலை***

*முடிவுகள்*

1. 44 சதவீதமான மாணவர்களினதும் 42 சதவீதமான ஆசிரியர்களினதும் பதில்களுக்கிணங்க மாணவர்கள் எழுத்துத்திறன் விருத்தியில் சாதாரணநிலையிலே உள்ளனர்.

2. 52 சதவீதமான மாணவர்களினதும் 39 சதவீதமான ஆசிரியர்களினதும் பதில்களுக்கிணங்க கற்ற விடயங்களை மாணவர்கள் குறித்த நேரத்தில் எழுதி முடிப்பதில் சிரமப்படுகின்றனர்.

*விதப்புரைகள்*

1. எழுத்துத்திறனில் சாதாரணமாக உள்ள மாணவர்களை மேலும் விருத்தியாக்கக் கூடிய வகையில் ஆசிரியர்கள் வாரத்தில் மூன்று நாட்கள் ஏதேனும் சிறியளவிலான கட்டுரைகள், கதைகள் போன்றனவற்றை செய்யக் கூடிய பயிற்சிகளை வழங்கல்.

2. மாணவர்களை கவரக் கூடிய விதத்தில் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி எழுத்துக்களை இனங்காட்டி அதனை முறையாக கற்றுக் கொள்வதற்கான பயிற்சிகளை வழங்கல்.

***எழுத்துத்திறன் விருத்தியின் முக்கியத்துவம்***

*முடிவுகள்*

1. 56 சதவீதமான மாணவர்களதும் 63 சதவீதமான ஆசிரியர்களதும் கருத்துக்கேற்ப வீடுகளில் கற்பதற்கான போதிய வசதிகள் காணப்படாததால் மாணவர்கள் எழுத்துத்திறனில் பின்னடைவாக உள்ளனர்.
2. 66 சதவீதமான மாணவர்களதும் 76 சதவீதமான ஆசிரியர்களதும் பதில்களுக்கிணங்க வகுப்பறைச் சூழல் பொருத்தமில்லாமல் காணப்படுவது மாணவர்களின் எழுத்துத்திறன் பின்னடைவில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

*விதப்புரைகள்*

1. பிள்ளைகள் கற்பதற்குரிய உளரீதியான, பௌதீகரீதியான வீட்டுச் சூழலை உருவாக்கி கொடுப்பதுடன், வீட்டில் உள்ள படித்தவர்கள் மாணவர்களின் கற்றலுக்கு உதவி செய்ய வேண்டும்.
2. அதிபர் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்குத் தேவையான வளங்களையும் வசதிகளையும் உரிய முறையில் பெற்றுக் கொடுத்து எழுத்துத்திறனில் இடர்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்குதல்.

***எழுத்துத் திறன் பின்னடைவினால் கற்றலில் எதிர் கொள்ளும் சவால்கள்***

*முடிவுகள்*

1. 51 சதவீதமான மாணவர்களதும் 66 சதவீதமான ஆசிரியர்களதும் கருத்துக்கிணங்க மாணவர்கள் எழுதுவதில் அதிகம் இடர்படுகின்றனர்.
2. 100 சதவீதமான ஆசிரியர்களின் பதில்களுக்கிணங்க மாணவர்களின் எழுத்துத்திறன் பின்னடைவால் ஆசிரியர்கள் கற்பித்தலில் சவால்களை எதிர் கொள்கின்றனர்.

*விதப்புரைகள்*

1. எழுத்துத் திறனில் பின்னடைவாக உள்ள மாணவர்கள் ஒவ்வொரு நாளும் எழுத்துக்களை திறம்பட எழுதுவதற்கு சொல்வதெழுதுதல், இடைவெளி நிரப்புதல், சிறிய கட்டுரைகளை எழுதுதல் போன்ற பயிற்சிகளை ஆசிரியர், பெற்றோர்கள் போன்றோர் மாணவர்களுக்கு வழங்கி இவ்விடர்பாடுகளை நீக்குவதற்கு உதவ வேண்டும்.
2. எழுத்துக்களை தவறாக எழுதுவதன் விளைவுகளை காணொளிகள், கதைகள் மூலம் விளக்குதல்.
3. ஆசிரியர்களும் இவ்வெழுத்துத்திறன் பின்னடைவான மாணவர்களுக்கு விசேடமாக எவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதை வாண்மை ரீதியான பயிற்சிகளைச் செய்து மேற்கொள்ளல்.

***எழுத்துத்திறன் விருத்திக்கான பரிகாரச் செயற்பாடுகளும் வழிமுறைகளும்***

*முடிவுகள்*

1. அனைத்து ஆசிரியர்களினாலும் பரிகாரச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு 68 சதவீதமான மாணவர்களின் கருத்தினையும் 78 சதவீதமான ஆசிரியர்களின் கருத்தினையும் ஆதாரமாகக் கொள்ள முடியும்.
2. புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி கற்பித்தல் செயற்பாடானது இல்லாத நிலையில் உள்ளது. இதற்கு 84 சதவீதமான மாணவர்களின் கருத்தினையும் 76 சதவீதமான ஆசிரியர்களின் கருத்தினையும் சுட்டிக் காட்டலாம்.
3. ஆசிரியர்களினால் முன்னேற்றமடைந்து வரும் மாணவர்களை ஊக்குவிக்கின்ற நிலையானது குறைவாகவே உள்ளது. இதற்கு 52 சதவீதமான மாணவர்களின் கருத்துக்களும் 66 சதவீதமான ஆசிரியர்களின் கருத்துக்களும் ஆதாரமாக அமைகின்றன.
4. பாடசாலையில் எழுத்துத்திறனை வளர்ப்பதற்கான தனியான குழு காணப்பட்ட போதிலும் நடைமுறையில் செயற்படுவதும், விசேட பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுவது குறைவாகவே உள்ளது. இதற்கு 72 சதவீதமான மாணவர்களது கருத்துக்களையும் 70 சதவீதமான ஆசிரியர்களது கருத்துக்களையும் ஆதாரமாகக் கொள்ள முடியும்.

*விதப்புரைகள்*

1. மாணவர்களின் தனியாள் வேறுபாட்டை அறிந்து கொண்டு அதற்கேற்ப சிறு சிறு குழுக்களாக்கி கற்பித்தல்களை மேற்கொள்ளல்.
2. தேர்ச்சி பெற்றவர்களின் வழிகாட்டல்களை மாணவர்களுக்கு பாடசாலை வழிகாட்டல் சேவையினால் பெற்றுக்கொடுக்க வேண்டும்.
3. பல்தர, பல்மட்ட கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிபர் ஆசிரியர்களின் நேரசூசியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொடுத்தல்.
4. நவீன கற்பித்தல் சாதனங்களின் போன்றவற்றினூடாக கற்பித்தல்.
5. மாலைநேர வகுப்புக்கள், கற்றல் அணுகுமுறைகள் என்பன சிறப்பாக அமைய வேண்டும். இதற்கு அதிபர், ஆசிரியர், பாடசாலைச் சமூகத்தினர் போன்றோர் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.
6. மாணவர்கள் விரும்பக்கூடிய கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதோடு செயற்பாடுகளின் போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பரிசு, பாராட்டுக்கள் என்பன வழங்க வேண்டும்.
7. எழுத்துத்திறன் தேர்ச்சியுடைய ஆசிரியர்களைக் கொண்டு பாடசாலையில் மாணவர்களின் எழுத்துத்திறனை வளர்ப்பதற்கான குழு அமைக்கப்பட்டு அதனை அதிபர் வழிநடத்துவதோடு ஊக்கப்படுத்த வேண்டும்.
8. பாடசாலை ஆலோசனை குழுவினர் எழுத்துத்திறன் பின்னடைவில் இருந்து மாணவர்களை மீட்டெடுக்க தனியான பயிற்சி வகுப்புக்களை ஒழுங்குபடுத்தி செயற்படுவதோடு அதனைத் தொடராக கண்காணிக்க பெற்றோர், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் போன்றோரை நியமிக்க வேண்டும்.

**உசாத்துணைகள்.**

அருள்மொழி,செ. (2008). *கல்வி ஆய்வு முறைகள்.* துர்க்கா அச்சகம்.

கருணாநிதி,மா. (2005). *வகுப்பறைச் செயற்பாட்டில் மொழித்தேர்ச்சியும் திறனும்.* அகவிழி அச்சகம்.

சந்தானம்,எஸ்., கணபதி,வி. (2003). *கல்வி சார் அறைகூவல்கள்.* சாந்தா பப்ளிஷர்ஸ்.

சந்திரசேகரம்,சோ. (2008). *சமகாலக் கல்வி முறையின் சில பரிமாணங்கள்.* சேமமடு பதிப்பகம்.

சிவத்தம்பி,கா. (2006). *தமிழ் கற்பித்தல்.* குமரன் புத்தகசாலை..

பெனடிக்கபாலன்,யோ. (2005). *கல்வி உளவியல் அடிப்படைகள்.* பூபாலசிங்கம் புத்தகசாலை.

Arafat Hamouda, (2013). An Inversting of Listerning Comprehension Problems Encounterd By Saudi Students In The EL Listening Class Room. *Journal of International English Language*, 1.

Charles Perfetti, Joseph Stafura, (2014). Word Knowledge in a Theory of Reading Comprehension. *Journal of the society for the scientific study of reading*, 5(3).

Fitri, (2013). An analysis on students ability and problems in writing recount texts at grade VIII at SMPN 29 Padang. *Journal of English language teaching*, 2 (1 ).

Ghodbane Nacira, (2019). Creative writing through literary texts and sample approach. *Journal of Algerian scientific journal platform*, 6 (1)..

Rosariyo,P. (2019). The Impact of three types of writing intervention on students writing quality. Kyoto university. Japan.

Siham Bouzer, (2021). EFL Writing Skills Devel opment Thorough Literature. Algeria.